**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி**

முன்னிலை: **திரு. கி. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**
நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம், ஜீலை மாதம், 04 ஆம் நாள் சனிக்கிழமை
**பல்வகை மனு எண். 6/2026**
**in**
**CC. No.838/2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
கோவில்பட்டி மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையம், .... மனுதாரர் /புகார்தாரர்

// எதிராக//

அய்யப்பன் .... எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது 04.07.2026 அன்று இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டு அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை –2(பொறுப்பு) அவர்களும், எதிர்மனுதாரர் தானே முன்னிலை ஆகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. இந்த மனு U/s. 348 of BNSS ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அசல் வழக்கில் புகார்தாரரும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் எதிரியும் ஆவார்கள்.

2. மனுதாரர் தரப்பில் புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக திருமதி. மீஹா (ஆய்வாளர்) என்பவரை இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க உத்தரவிடவேண்டி இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.06 20:32:00 +0530

3. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவுமில்லை என குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்,**

5. மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக ஆய்வாளர் திருமதி. மீஹா என்பவரை புலன்விசாரணை அதிகாரியாக விசாரிக்க உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையில்லை என குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ்வழக்கில் அ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை விரைவாக முடிப்பதற்காகவும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் எந்தவித கடுமையான ஆட்சேபனை எதுவும் இல்லை என்பதாலும், மேற்படி வழக்கில் திருமதி. மீஹா என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**எனவே இந்த மனுவானது அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 04 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.06 20:32:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
கோவில்பட்டி.